IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 70/2020

Deposition of witness for prosecution : PW8

Defense :

Name : டாக்டர் திரு.கிப்ட்சன் ஜோசப் செல்லதுரை

Father's Name : பாபு ராஜேந்திரன்

Village :

Taluk :

Caste :

Calling : மருத்துவர்

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.09.2023

முதல் விசாரணை

**1 , 2, 3 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**

1. நான் தற்போது வேலூர் அடுக்கம்பாரை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.06.2017ம் தேதி இரவு 1.05 மணிஅளவில் நான் பணியில் இருந்தபோது மணிகண்டன் என்கிற 22 வயதான ஆண் நபரை அவருடைய சகோதரர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதித்த போது அவர் தன்னை தனக்கு தெரிந்த 5லிருந்து 6வரையான ஆண்நபர்கள் 11.06.2017 ம் தேதி இரவு 9.15 மணி அளவில் தன்னை தாக்கியதாக கூறினார்.

2, அவரை நான் பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்களின் விவரம்- 1) முதுகில் 3 குத்துக் காயங்கள் 2)இடது உள்ளங்கையில் ஒரு கிழிந்த காயம் இருந்தது. அது 9 x 2 x 1 செமீ அளவில் இருந்தது. அவருக்கு முதல் உதவி அ ளித்து உள்நோயாளியாக சிகிச்சை பெற அனுமதி வழங்கினேன். காவல் துறைக்குதகவல் தெரிவித்தேன். மருத்துவமனையில் அவருக்கு இடது உள்ளங்கையில் நுண்கதிர் பரிசோதனை செய்யப்பட்டது.

மேலும் முதுகில் ஏற்பட்ட குத்துகாயங்கள் காரணமாக அவருக்கு நுரையீரல் வரை பாதிப்பு ஏற்பட்டதால் அவருக்கு முதுகில் ஏற்பட்ட குத்திய காயங்கள் கொடுங்காயம் என்று அவரை பரிசோதித்து உள்நோயாளியாக சிகிச்சை அளித்த மருத்துவர் சான்று வழங்கி உள்ளார். அவருக்கு உள்ளங்கையில் ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்ப காயம் என்று நான் சான்று வழங்கினேன். அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டது. விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ.6,** காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. காயம் பட்ட நபர் சிகிச்சைக்கு வருவதற்கு முன்பு ஆரணி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2. காயம்பட்ட நபர் தன்னை 5 அல்லது 6 ஆண் நபர்கள் தாக்கியதாக தான் சொன்னார் என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது ஒரு நபர் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது இரு சக்கர வாகனம் வழுக்கி கீழே விழுந்து அவர் உருளும் சமயத்தில் அவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதுஎன்றால் சரிதான்.

3. நான் வழங்கிய காயச்சான்றில் 2 காயங்களின் தன்மை குறித்து பிரித்து கருத்துரை வழங்காமல் பொதுவாக கொடுங்காயம் என்றுதான் சான்று வழங்கி உள்ளேன் என்றால் சரிதான்.

4. முதுகில் ஏற்பட்ட குத்து காயங்களுக்கு எக்ஸ்ரே அல்லது ஸ்கேன் எதுவும் எடுக்கப் படவில்லை என்றால் சரிதான்.